[18th November 1963

திரு. கரு. சீமைச்சாமி: இந்த முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் அதிகமாகப் பணம் பெற்று வரும் மாவட்டம் எது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப்பற்றி என்னிடம் விவரங்கள் இல்லை.

சாத்தனூர் நீர்த்தேக்கம்

* 245 **கேள்வி.—திரு. ப. உ. சண்முகம்:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் மேல் கதவுகள் (Shutters) அமைக்கப்பட்டுவிட்டனவா?

(இ) இந்த நீர்த்தேக்க ஆயக்கட்டின்கீழ் இன்னும் பல கிராமங்களைக் கொண்டுவர உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: (a) The work is under progress.

(b) No.

Employees of erstwhile District Board Schools

* 246 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that there is a difference in the mode of payment of salaries to the staff of the Government High Schools and the staff of the High Schools managed by erstwhile District Boards; and

(b) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) The staff in the Board High Schools are not treated as Government servants, while the staff employed in Government high schools are Government servants.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார்: ஸார், அரசாங்க பள்ளிக்கூடங்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு மாத ஆரம்பத்திலேயும், டிஸ்ட்ரிக் போர்ட்டின் கீழ் வேலைசெய்யும் பள்ளி ஆசிரியர்களுக்கு 20-ம் தேதிக்கு மேலும்தான் சம்பளம் கொடுக்கப்படுவதாக என்னிடம் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது உண்மை தானா என்பதை கனம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதில் வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் சொல்ல முடியாது. அரசாங்கம் நடத்துகிற பள்ளி ஆசிரியர்களுக்கு குறிப்பாக தலைமை ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நேரடியாக பணம் அனுப்புகிறது. ஜில்லா போர்டில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு அந்தந்த ஜில்லா ஸ்பெஷல் கல்வி அதிகாரிகள் மூலமாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இதனால் சிறிதளவு வித்தியாசம் இருக்கலாம்.

18th November 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : (ஜில்லா போர்ட்) கழகப் பள்ளி ஆசிரியர்களுக்கும், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களைப்போன்று தீபாவளி அட்வான்ஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி என்னிடம் எந்த விவரமும் வரவில்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், ஜில்லா போர்ட் சட்டபூர்வ மாக மறைந்து விட்டது. இப்படி டிஸ்ட்ரிக்ட் போர்ட் என்பது இல்லாமல் இருந்தும், அரசாங்கம் இன்னும் அந்தப் பள்ளிகளை எல்லாம் ஏன் ஏற்று நடத்தாமல் இருக்கின்றன ? ஆகவே அவற்றை எல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கான உத்தரவைப் பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : என்னுடைய அபிப்பிராயம் முடிவில் இந்தப் பள்ளிகள் எல்லாம் அரசாங்கத்தின் கீழ் வரும் என்பதுதான். இப்போது இதில் பல கஷ்டங்கள் இருக்கலாம். மாவட்ட கழகத்தின் கீழ் நடக்கும் பள்ளிகளை எடுத்துக்கொண் டால் அவைகளுக்கு பலர் உதவி செய்திருக்கிறார்கள். பலர் அதில் அக்கறை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இருந்தாலும் கடைசி யில் இது அரசாங்க பள்ளிகளாகவே வரும் என்பதுதான் என் அபிப்பிராயம்.

* 247 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the employees of the High Schools of the erstwhile District Boards have since been taken over by the Government as Government servants; and

(*b*) if so, whether they are given the same privileges as given to the employees of the Government High Schools ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No.

(*b*) Does not arise.

* 248 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is fact that the Teachers of Secondary Schools of the erstwhile District Boards are not treated on a par with the teachers of the Government High Schools; and

(*b*) if so, whether the Government will take steps to remove the said disparity ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, though the scales of pay are generally the same the rules governing their services are different.

(*b*) At present the Government have decided to treat the erstwhile District Board Secondary Schools as a separate category and have appointed Special District Educational Officers to administer them. The question of equating the teachers of these schools with those of the Government Schools does not, therefore, arise now.